Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC.245/2025**

Preliminary Register

Deposition of **PW- 5 LW -4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பாலு | Father Name | : | முருகேசன் |
| Village | : | உத்தமதானபுரம் | Taluk | : | வலங்கைமான் |
| Age | : | 53 | Calling | : | விவசாயி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 14th day of May 2026.

சாட்சி வலங்கைமான் காவல் நிலையம் தலைமைக்காவலர் திரு.R.கல்யாணசுந்தரம் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டுள்ளார். எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாய தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் எதிரிகளைத் தெரியாது. இவ்வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு அனுசரணையாக சாட்சியமளிக்காததால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் அனுமதி அளிக்கப்பட்டது.**

கடந்த 16.05.2025ம் தேதி அதிகாலை 12.30 மணியளவில் உத்தமதானபுரம் நார்த்தா தோப்பு சுரேஷ் என்பவரின் வீட்டருகே கனகராஜின் மகன்கள் குணசீலனும், அபிஷேக்கும் நின்று கொண்டிருந்தார்கள் என்றால் சரியல்ல. எதிரிகள் அவர்களை அசிங்கமான வார்த்தைகளால் பேசி பிளேடால் வலது கை முகத்தில் கிழித்து

காயப்படுத்தி கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரில் பார்த்தேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.05.14 15:00:21 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC.245/2025**

Preliminary Register

Deposition of **PW-6 LW-6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சரண் | Father Name | : | குணசீலன் |
| Village | : | உத்தமதானபுரம் | Taluk | : | வலங்கைமான் |
| Age | : | 30 | Calling | : | தனியார் வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 14th day of May 2026.

சாட்சி வலங்கைமான் காவல் நிலையம் தலைமைக்காவலர் திரு.R.கல்யாணசுந்தரம் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டுள்ளார். எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் ச/பி 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்படுகிறது. எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து தனியார் தொழில் செய்து வருகிறேன். ஒரு வருடத்திற்கு முன்பு தேதி மாதம் ஞாபகமில்லை. காலை 09.30 மணியளவில் பிள்ளையார் கோவில் அருகே நின்றுகொண்டிருந்த போது அங்கு வந்த போலீசார் சண்டை நடந்தது சம்மந்தமாக வரைபடம் வரைந்து என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். என்னிடம் காட்டப்படும் மாதிரி வரைபடத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

பார்வை மகசரில் நானும் பாலுவும் கையெழுத்து செய்தோம். அதில் என்ன எழுதியிருந்தது யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.05.14 15:00:32 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC.245/2025**

Preliminary Register

Deposition of **PW- 7 LW - 8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சுப்ரமணியன் | Father Name | : | அண்ணதுரை |
| Village | : | தளவாய்புரம் | Taluk | : | ராஜபாளையம் |
| Age | : | 31 | Calling | : | உதவி ஆய்வாளர். – தளவாய்புரம் காவல் நிலையம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 14th day of May 2026.

எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் ச/பி 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்படுகிறது. எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

<u>**முதல் விசாரணை-**</u>

நான் தற்போது ராஜபாளையம், தளவாய்புரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.05.2025 ம் தேதி நிலைய பொறுப்பில் இருந்தபோது கும்பகோணம் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் படி உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த அ.சா.1 குணசீலன் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று மனு எண் 323/2025 என பதிவு செய்து 18.05.2025ம் தேதி காலை 08.30 மணிக்கு அ.சா. 1 கொடுத்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நிலையக் குற்ற எண் 147/2025 ச/பி. 296(b), 118(1), 351(3) of BNS ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். மேற்படி முதல்

தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ. 3 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. அன்றைய தினமே காலை 09.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் குமரன், சரண் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். அவை முறையே **அ.த.சா.ஆ. 4** மற்றும் **அ.த.சா.ஆ. 5 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. சாட்சிகள் குணசீலன், அபிஷேக், கணகராஜ், பாலு மற்றும் பார்வை மகசர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவம் உண்மையென்று தெரியவரவே எதிரிகளை கைது செய்ய தேடிய போது எதிரிகள் அனைவரும் முன்ஜாமீன் பெற்று நீதிமன்றத்தில் சரணடைந்து பிணையில் சென்றுள்ளார்கள் என்ற விபரத்தினை தெரிந்து கொண்டேன். அ.சா.1க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. மகேஷ்வரன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அ.சா.1க்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று பெற்றுள்ளேன். அந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று **அ.த.சா.ஆ.6 ஆக** குறியீடுசெய்யப்படுகிறது. எனது விசாரணையை முடித்து எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** -

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளான 16.05.2025 அன்று எனக்கு மருத்துவமனையிலிருந்து தகவல் கிடைத்தது என்றால் சரிதான். நான் அன்றைய தினமே அதே தேதியில் வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் சரிதான். நான் முதல் தகவல் அறிக்கை அன்றைய தினமே பதிவு செய்தேனா என்றால் இல்லை. நிலைய மனு எண் 323/2025 பதிவு செய்து விசாரணைக்கு பின் 18.05.2025 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். சம்பவத்தில் பயன்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் பிளேடினை கைப்பற்றினேனா என்றால் கைப்பற்றவில்லை. நான் சம்பவயிடம் சென்று சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் பொய்யாக எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கான வரைபடம் மற்றும் பார்வை மகசர் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் அ.சா.1க்கும் இடையே முன்விரோதம் இருந்து வந்தது என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரைப் பெற்று முறையாக விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN
Digitally signed by JESU BALAN
Date: 2026.05.14 15:00:45 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.